சுருக்கம்

வேளாண்மைத் துறை – வேளாண்மை விரிவாக்கப் பணிகள் – விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை – விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது

---

வேளாண்மை (வேநி4(2) துறை

அரசாணை (நிலை) எண்.209 நாள் 24.12.2014

படிக்கப்பட்டது

1. தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 07.08.2014
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.வேதொமே1/115634/2013, நாள் 23.12.2014

------

ஆணை :

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.08.2014 அன்று கீழ்க்கண்டவாறு அறிவிப்பு செய்தார்கள் –

> " தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியை மேலும் பெருக்கும் வகையில் 16 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் " **விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை ''செயல்படுத்தப்படும்.** இந்த திட்டத்தின்படி விவசாய உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படும்.''

2 மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்டத்தில் குழுசார்ந்த நிரந்தரபயணத்திட்டம் செயல்படுத்திட கிராம அளவில் விவசாயிகளை ஒருங்கிணைத்து, தொடர்புடைய கிராமத்தில் உள்ள பயிர்சாகுபடிக்கு ஏற்ப, விளைபொருள் குழுக்களை அமைத்து குறிப்பிட்ட காலஅளவில், குறிப்பிட்ட கிழமையில் குழு விவசாயிகளை நேரடியாக சந்தித்து பயிர் சாகுபடி தொடர்பான தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தல், செயல் விளக்கங்கள், பயிர்நிலை ஆய்வு வாயிலாக வேளாண் விரிவாக்கப்பணியினை கீழ்க்கண்டவாறு முறைப்படுத்திட வேண்டி வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்தார்.

- தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின் வாயிலாக வேளாண்மை விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்படும் அனைத்து வட்டாரங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளை (Village Panchayat) வட்டாரத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள உதவி வேளாண்மை அலுவலர்களின் (விரிவாக்கம்) எண்ணிக்கையினைக் கொண்டு பகுத்தளித்து, அதன் அடிப்படையில் உதவி வேளாண்மை அலுவலர்கள் வாரியாக கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதியினை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

- உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதியினை 8 பகுதிகளாக பிரிக்க வேண்டும். 8 கிராமங்களுக்கு மேல் ஒரு உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்ய நேர்ந்தால், கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், இரண்டு கிராமங்களை ஒன்றிணைத்து ஒரே நாளில் பார்வையிடும் வகையில் நிரந்தர பயணத்திட்டம் வகுத்து எட்டு கிராமங்களுக்கும் குறைவான கிராமங்கள் ஒரு உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டால், இதிலுள்ள பெரிய கிராமத்தினை இரண்டாக பிரித்து எட்டு தொகுதியாக்கி பயணம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

- மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் திங்கள் முதல் வியாழன் வரையுள்ள 8 நாட்களில் (4+4) 8 பகுதிகளுக்கும் நிரந்தரமாக பயணத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். அதே பயணத்திட்டத்தினை மாதத்தின் 3–ஆம் மற்றும் 4–ஆம் வாரங்களிலும் பின்பற்றுதல் வேண்டும்.

- உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லும் எட்டு தொகுதிகளிலும் உள்ள கிராம ஊராட்சி அலுவலகங்களில் தொடர்பு மையம் ஒன்றினை ஏற்படுத்தி பயண விவரத்தினை பதிவு செய்திட வேண்டும். கிராம ஊராட்சி அலுவலகம் இல்லாத நிலையில் பிற பொது இடங்களில் தொடர்பு மையம் அமைக்கப்பட வேண்டும். உதவி வேளாண்மை அலுவலர்கள் தொடர்பு மையத்தில் வருகையினைப் பதிவு செய்து வயல்வெளிகளுக்குச் சென்று விவசாயிகளிடையே தொழில்நுட்ப பரவலாக்கம் உள்ளிட்ட விரிவாக்கப் பணியினை மேற்கொண்டு மீள தொடர்பு மையத்திற்கு வருகை தந்து விவசாயிகளிடையே தொழில்நுட்ப கலந்துரையாடல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

- தொடர்பு மையத்தில் உதவி வேளாண்மை அலுவலர்கள் தொடர்பான பயண விவரம் உள்ளடக்கிய சுவர் விளம்பரம் செய்திடல் வேண்டும்.

4. மேற்காணும் சூழ்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்ததில், தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடவும் விரிவாக்கப் பணிகளை மேலும் செம்மைப்படுத்த, பண்ணையளவில் விவசாய விளைபொருள் குழுக்களை அமைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கவும், பயிர் சாகுபடி தொடர்பான இடர்பாடுகளை நீக்கி, உரிய முறையில் விளைபொருட்களை சந்தைப்படுத்த தற்போதுள்ள விரிவாக்க முறையினை முறைப்படுத்தி அமைத்து இரண்டாம் பசுமைப்புரட்சியின் இலக்கான **"இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம்"** என்ற குறிக்கோளினை அடையும் பொருட்டு முதற்கட்டமாக **" வேளாண்மைத் துறையில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறையினை "** மேலே பத்தி 3ல் தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி, இத்திட்டத்தினை 05.01.2015 முதல் செயல்படுத்திட முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

5. இத்திட்டம் செயல்படுத்துவது தொடர்பான விரிவான வழிமுறைகளை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேளாண்மை இயக்குநருக்கு அறிவுத்தப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ராஜேஷ் லக்கானி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்**
**அரசு செயலர்**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை 5.
நகல்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை 5.
இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை 32.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை 35.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலர், சென்னை 9.
வேளாண்மைத் (வரவு–செலவு / பொது / வேஉ 1) துறை, சென்னை 9.
இருப்புத் தணிக்கை அலுவலர், சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்